சம்பவங்கள் நிகழாமல் தடுத்தனர். அமைச்சர் கலந்து கொண்ட ஊர்வலம் பொதுக் கூட்டம் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகள் அமைதி யாக நடந்தேறின. எந்தவிதமான எதிர்விளைவும் இன்றி நிலைமை அமைதியாக இருக்கின்றது.

(2) வேலையிழந்த இந்தி ஆசிரியர்களின் நிலை.

THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Sir. I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, viz., the plight of Hindi Pandit who are thrown out of their appointment in the State.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மும்மொழித் திட்டத்தை நீக்கிவிட்டு, இருமொழித் திட்டத்தைக் கொண்டு வருவதென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளதன் விளைவாக, இம் மாநிலத்தில் பல்வேறு நிர்வாகங்களின்கீழ் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் இந்தி ஆசிரியர்களைப் பணியிலிருந்து அகற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தகுதியுள்ள இந்தி ஆசிரியர்களைப் பணியிலிருந்து அகற்ற வேண்டாமென பள்ளிக் கல்வித் துறை இயக்குநருக்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. அவர்களுக்கு எந்த மாற்று வேலைகள் அளிக்கப்பட்டாலும் அவர்கள் பெறும் சம்பளம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. கீழ்க் கண்ட வகை இந்தி ஆசிரியர் கள் தான் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தற்காலிக அடிப்படை யில் நியமிக்கப்பட்டிருந்ததே அதற்குக் காரணமாகும். (1) தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தகுதி பெறு இந்தி ஆசிரியர் கள் (2) பகுதி நேர இந்தி ஆசிரியர்கள்.

உள்ளாட்சி நிறுவனங்களின்கீழ் உள்ள பணியாளர்களுக்குப் பொருந்தும் விதிகளின்படி, தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் பணிகள், எந்த அறிவிப்பும் கொடுக்கப்படாமல் அல்லது எந்தக் காரணமும் காட்டப்படாமல் எந்தச் சமயத்திலும் குறிப்பாகப் பள்ளியாண்டின் முடிவில் இறுதி செய்யப்படும். அத்தகைய தற்காலிக இந்தி ஆசிரியர்களின் பணிகளை இறுதி செய்ய ஏற்கெனவே உள்ள விதிகளின் கீழ்ச் சில மாவட்டக் கல்வி அதிகாரிகளும் மகளிர் பள்ளிகளின் ஆய்வாளர்களும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது. தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள, ஆனால் தகுதி பெற்றுள்ள அத்தகைய ஆசிரியர்களுக்குக்கூட மாற்று வேலை அளிக்கும்படி அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, மாவட்டக் கல்வி அதிகாரி களுக்கு மகளிர் பள்ளிகளின் ஆய்வாளர்களுக்கும் பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் தேவையான கட்டளைகளைப் பிறப்பித்துள்ளார்.